பாடம் 10

# எனக்குப் பிறன் யார்?

*வகுப்பில் தன்னுடன் யாருமே பேசாமல், தங்களது பழைய நண்பர்களுடன் ஜாலியாக இருந்த மாணவர்களைக் கண்டு ஜெக்கப்புக்கு அழுகையாக வந்தது. ஏனென்றால், வெளி யூரில் இருந்து புதிதாக அந்த வருடம்தான் அந்தப் பள்ளியில் அவன் சேர்ந்திருந்தான். தனியாக விடப்பட்ட அவனைப்போன்ற ஒரு சம்பவத்தைப் பார்ப்போமா?*

இயேசுவின் அருகே ஒரு வாலிபன் வந்தான். "போதகரே, நித்திய ஜீவனைப் பெற நான் என்ன செய்யவேண்டும்?" என்று இயேசுவிடம் கேட்டான்.

"வேதம் என்ன சொல் கிறது?" இயேசு அவனிடமே எதிர்க்கேள்வி கேட்டார்.

"உன் தேவனாகிய கர்த்த ரிடத்தில் உன் முழு ஆத்துமா வோடும் உன் முழு இருதயத் தோடும், உன் முழுப் பெலத் தோடும், உன் முழுமனதோடும் அன்புகூறவேண்டும். உன் னிடத்தில் நீ அன்புகூருவது போல, உன் பிறனிடத்திலும் அன்புகூறவேண்டும் என்று வேதம் கூறுகிறது" என்று இயேசுவிடம் அந்த வாலிபன் பதில் அளித்தான்.

"மிகவும் சரியாகச் சொன் னாய். அப்படியே செய்" என்று கூறி இயேசு அவனைப் பாராட் டினார். ஆனால், அவனோ, தனது கேள்வியால் இயேசுவை மடக்கும்படிக்கு "எனக்குப் பிறன் யார்?" என்று கேட்டான்.

அப்போது ஒரு கதையின் மூலம் இயேசு அந்த வாலிப னுக்குப் பதில் அளிக்க விரும் பினார். கதை சொல்ல ஆரம் பித்தார். "ஒருமுறை ஒரு மனி தன் எருசலேமிலிருந்து எரிகோ வுக்குப் பயணித்தான். வழியில் அவன் திருடர்களிடம் மாட்டிக் கொண்டான்.

அவர்கள் அவன் சாகும் படிக்கு அடித்துப் போட்டு விட்டார்கள். பின் அவனிட மிருந்த பணத்தை எல்லாம் கொள்ளை அடித்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், அவனோ இறந்துவிடவில்லை. உயிருக்காகப் போராடிக்



**மனன வசனம்**

**உன்னிடத்தில் நீ அன்பாயிருக்கிறதுபோல உன் பிறனிடத்திலும் அன்பாயிரு.**

**லூக்கா 10:27.**

கொண்டிருந்தான்.

அப்போது ஓர் ஆசாரியன் அவ்வழியே வந்தான். காயத்துடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்த மனிதனைக் கண்டான். ஆனால், அவனுக்குச் சிறிதும் உதவாமல், தன் வழியே விலகிச் சென்றுவிட்டான்.

பின்னர் தேவனுடைய வேலையைச் செய்யும்படிக்கு அவ்வழியே ஒரு லேவியன் வந்து கொண்டிருந்தான். அவனும் மிகுந்த வேதனையில் முனகிக் கொண்டிருந்த அந்த மனிதனைக் கண்டான். ஆனாலும், அவனுக்கு எந்த விதத்திலும் உதவ முன்வரவில்லை. தனது வழியே அவன் ஆலயத்தை நோக்கிச் சென்றுவிட்டான்.

சிறிது நேரம் கழித்து ஒரு சமாரியன் அந்த வழியே வந்தான். காயத்துடன் மிகுந்த வேதனையால் துடித்துக்கொண்டிருந்த அந்த மனிதனைக் கண்டான். அவன்மேல் இரக்கம் கொண்டான். அவனது காயத்தைக் கழுவிச் சுத்தம்செய்தான். பின்னர் அவனது காயங்களுக்கு மருந்திட்டான். பின் தனது கழுதையின்மேல் அவனையும் ஏற்றிக்கொண்டான். காயப்பட்டிருந்த அந்த மனிதனைக் கவனத்தோடே சத்திரத்துக்குக் கொண்டு சென்றான்.

சத்திரத்தானிடம், ‘இந்த மனிதனுக்கு வைத்தியம் செய்து, உணவும் அளித்து பத்திரமாக இவனைக் கவனித்துக் கொள்ளும்; அதற்கான செலவுக்காக என்னிடமிருந்து இந்தப் பணத்தைப் பெற்றுக்



## செய்தி

**ஒவ்வொருவரும்**
**தேவனுடைய அன்பிற்குள்ளானவர்கள்.**

கொள்ளும். அதிகப்படியான செலவையும் நான் தந்து விடு கிறேன்’ என்று கூறி, சத்திரத்தானிடம் ஒப்படைத்துச் சென்றான்.

“ஆசாரியன், லேவியன், சமாரியன் ஆகிய இந்த மூவரில் காயம் பட்டிருந்தவனுக்குப் பிறனாக இருந்தவன் யார்?” என்று இயேசு அந்த வாலிபனிடம் கேட்டார். “காயப்பட்டிருந்த மனிதனுக்கு உதவி செய்தவனே” என்று அமைதியாக அந்த வாலிபன் பதில் கூறினான்.

“நீயும் அப்படியே கனிவாகப் பிறரிடம் நடந்துகொள்” என இயேசு அந்த வாலிபனிடம் கனிவாகச் சொன்னார். தனது திமிரும் பெருமையும் அடங்கியவனாக அந்த வாலிபன் சென்றான்.

என் கண்ணே! தேவனுடைய பார்வையில் யாவரும் சமமானவர்களே.

**செய்முறை: எந்தெந்த வழிகளில் நீ உன் பிறனுக்கு உதவமுடியும் என்பதை இங்கே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் வட்டமிட்டுக் காட்டு.**

**பதில் 10**

